International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 01 Issue: 01 July to September 2019 www.irjtsjournal.org

# கிறித்துவ காப்பியங்கள் உணர்த்தும் தலைமை மாந்தரின் இல்லற மாண்பு

ஆ.டேவிட்,

*பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*

*மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,*

*மதுரை.*

**முன்னுரை**

தமிழ் இலக்கியங்களில் மக்களின் நெஞ்சைக் கவர்கின்ற தனித்த சிறப்புடையது காப்பிய வடிவமாகும். இராமன், சீதையின் வாழ்வியலை முன்னிறுத்துகின்ற இராமாயணமும், கோவலன், கண்ணகியின் கதையைச் சொல்லுகின்ற சிலப்பதிகாரமும் குறிப்பிடத்தக்கனவாகும். இவ்வரிசையில் கிறித்துவக் காப்பியமான தேம்பாவணியும் வளன், மரியாவின் வாழ்க்கையினைப் படம்பிடித்துக் காண்பிக்கிறது. மீட்பரசி காவியத்தில் யூதித்தை காவிய தலைமை மாந்தர்களாகிக் கொண்டமையை அவர்களின் பண்புநலன்கள் எவ்வாறெல்லாம் வெளிப்பட்டுள்ளது என்பது குறித்து இக்கட்டுரையில் குறித்து ஆராயலாம்.

**மீட்பரசி காவிய கதைச்சுருக்கம்**

கவிஞர் லோட்டஸ் எடிசன் எழுதிய மீட்பரசி காவியம், போர் காண்டம், அறத்துக்காண்டம், வெற்றிக் காண்டம், விடுதலைக் காண்டம் ஆகிய நான்கு காண்டங்களையும், 625 பாடல்களையும் கொண்டது. நேபுகாத்நேசர் என்னும் மன்னன் நினிவே மாநகரைத் தலைமையிடமாகக் கொண்டு அசீரியர்களை ஆட்சிபுரிந்து வந்தான். மன்னனின் கட்டளைப்படி படைத்தளபதி ஒலோபெரின் என்பான் படையை திரட்டி யூதேயாவில் வாழும் இஸ்ராயேலர்களை அழிக்க முற்பட்டான். படையெடுத்துச் செல்லும் போது இஸ்ராயேல் மக்கள் தங்கள் தலைவன் ஊசியாவிடம் தம்மைப் பாதுகாக்க மன்றாடினர். அவ்வமயம் பெத்தூலியா என்னும் நகரில் செல்வச் செழிப்புடனும், நிறைந்த அழகுடனும் யூதித்து எனும் மங்கை தன் கணவன் மனாசேயுடன் மகிழ்வுடன் வாழ்ந்து வந்தாள். திடீரென அவள் கணவன் சூரியதாக்கு நோயால் இறந்து விடுகிறான்.ஆற்றொணாத் துயரில் ஆழ்ந்த யூதித்து இறைவனின் ஆணைக்கிணங்க, இஸ்ராயேலரை ஒலோபெரினிடமிருந்து மீட்க அவனது பாசறைக்குள் எபிரேய பெண் எனக்கூறி நுழைகிறாள். மது மயக்கத்தில் இருந்த ஒலோபெரினை வாளால் வெட்டி தலையைக் கொய்து எடுத்துக்கொண்டு பெத்தூலியா நகருக்குச் சென்று அங்கு நடந்தவற்றை விளக்குகிறாள். அசீரியர்களை எதிர்த்து போரிட்டு வெற்றி வாகை சூடி தன் செல்வங்களையெல்லாம் எளியவர்க்குக் கொடுத்துவிட்டு துறவுக்கோலம் பூண்கிறாள்.

**பொறுமையின் பொய்கை யூதித்து**

காவியத் தலைவியான யூதித்து எனும் மங்கையின் இயல்புபற்றி கூறப்படுகிறது.

“பொறுமையாம் பொய்கை தன்னில்
அனுதினம் குளித்தெழுந்து
வறுமையைக் கொன்ற ழிக்கும்
பகிர்தலாம் மரபில் தோன்றி
உறுதுணை வேண்டும் நெஞ்சில்
அன்பெனும் வேதம் மீட்டி
மறுமையை வெல்லத் தானே
இல்லற ‘மனாசே’யை அடைந்தாள்!”

பொறுமையில் அனுதினமும் குளித்து, வறுமை என வந்தவர்க்கெல்லாம் வாரி வழங்கும் மரபில் தோன்றியவள் யூதித்து. நெஞ்சில் அன்பு எப்போதும் நிலைத்திருக்க, மறுவுலக வாழ்வை வென்றிட வேண்டும் என்ற உறுதி கொண்டு தன் கணவரான “மனாசே” என்பவரை கரம் பிடித்ததாகக் கூறப்படுகிறது. பெண் என்பவள் பொறுமையையும், வறுமையில் வாடியவர்க்கு வாரிவழங்குதலும் ஆகிய இயல்பான குணம் படைத்தவள் என்பதை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கவிஞர் உறுதியாக எடுத்தியம்புகிறார். யூதித்து பணக்கார குடும்பத்தில் பிறந்தாலும் எளிமையாக மணம் புரிந்ததால் அந்த காலக்கட்டத்திலும் எளிமைக்கு சான்றாக திகழ்ந்தார் என்பதும் எடுத்துக்காட்டப்படுகிறது.

**மனையற மகிழ்ச்சியில் யூதித்து**

வாழ்க்கைத் துணைவியாக யூதித்து மனையறத்தில் ஈடுபடும்போது நிகழ்வு சித்தரிக்கப்படுகிறது.

“ஆதவன் விழித்தெழும்
முன்பெழும் காலையில்
துயிலெழும் கோதையும் யூதித்தோ
சாதனை யொன்றாம்
தியானம் இருந்து
உள்முக ஆற்றலைத் திரட்டிடுவாள்” (மீட். 271)

பின் தூங்கி முன் எழுவாள் பத்தினி என்பதற்கேற்ப காலை கதிரவன் தன் கதிர்களை வீசும் முன்பே எழுந்து தூக்கம் களைத்திடுவாள். அனுதினமும் தன்னுள் சிறந்த ஆற்றலைப் பெற்றிட தியானத்தினை மேற்கொள்வாள். கணவனின் கண்களில் தினமும் அன்பினை பெற்று, வேதனையில்லா வாழ்வினைக் கொண்டு சக மனிதர்களிடம் சிறப்புற வாழ வழிவகைகள் சொல்லுவாள். கவிஞன் காலையில் சூரியன் எழும்முன்னே யூதித்து எழுந்து தியானம் மேற்கொண்டாள் எனக் கூறுவதிலிருந்து, ஒவ்வொரு நாளும் காலையில் உத்வேகம் பெறுவதற்கும், அந்த நாள் சிறப்பாக அமைய வழிவகை செய்வதற்கும், தியானத்தின் மேன்மையை போற்றுகிறார். ஒரு குடும்பப் பெண் தன் கடமையில் தவறாது வாழ்ந்தாள் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவள் யூதித்து. அதேநேரம் நம்மில் எத்தனை பேர்

காலையில் எழுந்து தியானம் செய்கிறோம் என்ற கேள்வியையும் இலைமறைகாயாக கேட்கிறார். அன்பாக இருக்கும் கணவன் மனைவியின் உறவுநிலையில் கருத்து வேறுபாடு இன்றி வாழ்ந்த நிலையை அறியமுடிகின்றது.

"போரிடும் வேதனைப்
போலவே கணவனைத்
தாக்கிடும் சூழலை வீழ்த்திடவே
காரியத் தோடுநல்
கனிமொழி கூறிதன்
மனையற அமைதியைச் சுரந்திடுவாள்" (மீட். 275)

கணவனுக்கு அன்றாடம் வரும் வேதனைகளை களைதற்பொருட்டு, சரியான வழிவகைகளைக் கூறி குடும்பத்தில் அமைதி தழைத்திட செய்திடுவாள். தன்னுடைய கூர்மையான அறிவுத் திறத்தால் கணவன் சிறப்பாக செயல்பட வழிகள் கூறி இல்லற வாழ்வு இனித்திட செய்பவளாக இருக்கின்றாள். யூதித்து வீரம் படைத்த பெண்ணாக இருந்தபோதிலும் அவளிடம் ஒரு இணக்கமான உறவினைக் காணமுடிகின்றது.

**இல்லறம் எனும் நல்லறத்தில் யூதித்து**

யூதித்து கணவன் மனாசேயுடன் இல்லறம் நடத்திட பாங்கினை சிறப்புற காணமுடிகிறது. பொங்கும் மனதோடும், அன்பின் விரைவோடும் எங்கு சென்றாலும் விரைவாக வந்து மனைவியோடு அன்புடனும் பாசத்தோடும் இல்லற வாழ்வினை மனாசே நடத்துகிறார். வீட்டில் யூதித்தோடு எவ்வாறு அன்புகொண்டு வாழ்கிறாரோ அதேபோல் தோட்டத்தில் கோதுமை பயிர்கள் மீது தன் அன்பை காட்டி வளர்த்து வந்துள்ளார். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து அன்பு செலுத்தி வாழ்ந்துள்ளனர்.

மனாசே ஏழைகளுக்கு இரங்கி உதவி செய்தும், வறியவர்களுக்குப் பொருள் கொடுத்து உதவியதாகவும் கூறப்படுகிறது. யூதித்து தன் கணவர் மனாசே உதவி செய்வதைப்பார்த்து கோபம் அடையவில்லை, மாறாக பேரன்பு கொண்டவளாக இருக்கின்றார். இல்லற வாழ்வு இனிது சிறக்க இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து வாழ்க்கை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

**கணவன் வேதனையைக் கண்டுதுடித்த யூதித்து**

ஒரு மனைவியாக அருகில் இருந்து கணவன் படும் வேதனையைக் கண்டு சகித்துக் கொள்ள முடியாதவளாக இருக்கிறாள்.

"ஆவி துடித்தழுதாள் – யூதித்து
நெஞ்சு உடைந்தழுதாள்

மேவிய அச்சமெல்லாம் – எங்கும்
முழங்கிடத் தானழுதாள் . . . .
பாவியர் மனிதரென்று – கதிரோன்
பாய்ச்சிய சூடுகண்டு
சாவினைக் கண்டாற்போல் – மனாசே
விழுந்ததைப் பார்த்தழுதாள் . . . .'' (மீட்.315)

தன்னுடைய கணவனாகிய மானசே, வெயில் கொடுமையால் தாக்குண்டு சுருண்டு விழுகிறார். அதனைக் கண்ட யூதித்து அச்சம் கொண்டு துடித்து அழுது புலம்புகிறார். கணவன் இறந்து விட்டால் சமுதாயம் தன்னைப் புறக்கணித்து விடுமோ என்ற அச்சம் இன்று மட்டுமல்ல அன்றே யூதித்திற்கும் இருந்துள்ளதை காப்பியம் கூறுகின்றது.

வெயிலின் கொடுமையில் சிக்கிய மனாசே, பட்ட துயரைக் காட்டிலும் யூதித்தின் உள்ளமும், அடைந்த துயரமும் அளவிடற்கரியது. பயிர்கள் அழுவதுபோல் அவரை சுற்றிய அனைத்துக் கண்களும் அழுதன. மருத்துவரும் வந்து நோய்க்கான மருத்துவமும் செய்தார். பலவித மருத்துவ முறை செய்து காத்திட யூதித்து முனைந்தாலும், கணவனின் வேதனை கண்டு துடிக்கின்றாள். தன் கணவன் இறப்புக்கு காரணமாக இருந்த சூரியனைச் சபிக்கின்றாள். வீரம் நிறைந்த பெண்ணாக இருந்தாலும், கணவனின் இறப்பு என்பது ஈடுகட்ட முடியாத இழப்பு என்று உணரும் சாதாரணப் பெண்போல் புலம்புவது, கணவன் மீது கொண்ட அன்பையும், ஆறாக்காதலையும் புலப்படுத்துகிறது.

**கணவனுக்காக மன்றாட்டில் யூதித்து**

கணவனின் மீது கொண்ட பற்றால் அவர் உயிர் நீங்கிடக்கூடாது என்பதற்காக துடிக்கின்றாள்.

''பாசமொன்றைத் தீபமாக்கி
கணவனுக்குள் வாழும்நான்
பாவம் அவர் மேனிவாழ
உயிரின்பிச்சைக் கேட்கிறேன்'' (மீட்.322)
பாவிஎன்றன் உயிர்பறித்து
கணவனுயிர் காத்திடில்
பாரிலுன்றன் ஊழியத்தால்
ஞானம்உம்மில் தேடுவேன்
ஆவிஎன்னை விட்டுப்பிரியும்
அவ்வுணர்ச்சிப் போலவே
கணவருடல் வருந்தக்கண்டு

குருதிபொங்கித் துடிக்கிறேன் . . . .'' (மீட்.323)

பாசமொன்றையே விளக்காகக் கொண்டு வாழும் யூதித்து தன் கணவரின் உயிர் நீடிக்க இறைவனிடம் உயிர்பிச்சை கேட்கின்றார். பிறர்க்கு தீமையே நினைக்காத என்னுயிர்க் கணவரை என்னிடம் இருந்து பிரிக்காது என்உயிரை எடுத்துக் கொண்டு கணவரை விட்டுவிடுமாறு மன்றாடுகிறாள். தன் இல்லறத் துணைக்காகத் தன் இன்னுயிரையே இழக்கும் துணிவு வருகிறது என்றால் அது அவன் மீது அவள் வைத்திருக்கும் அசைக்க முடியாத அன்பைக் காட்டுகிறது.

**மனாசேயின் பிரிவில் யூதித்து**

கணவர் பிரிவை சந்தித்த மனைவி படும் ஆற்றாமையை பின்வரும் பாடல் விவரிக்கிறது.

''வானிலே சுழன்றிடும்
தினகரன் இறந்திடின்
உலகமோ இருள்வதுபோல்
மேனியு டன்அன்பு
உயிரிழந் தோடிய
கணவரால் இவளிருண்டாள்! . . . . (மீட்.329)

கணவனுக்காக பாண்டியன் அரண்மனையில் வாதாடிய கண்ணகிபோன்றும், சத்யவான் உயிரைக்காப்பாற்ற எமனிடம் மன்றாடிய சாவித்திரி போன்றும் இங்கு யூதித்து கதாப்பாத்திரம் பேசப்படுகின்றது. உயிர் பிரிந்த மனாசேயின் சடலத்தைப் பார்த்து யூதித்து அழுது புலம்புகிறார். வானத்திலே சுழன்று வரும் சூரியன் இறந்துவிட்டால் உலகமே இருள் சூழ்ந்து விடுவதுபோல கணவர் இறந்ததால் தன் வாழ்க்கையும் இருண்டு விட்டதென நினைக்கிறார். என்றாலும் வாழ்க்கையில் போராடி வெற்றி காண வேண்டும் என்ற வீரம் மனதுள் கனன்று கொண்டிருக்கிறது. யூத இன மக்களை காப்பாற்ற வேண்டும் என்ற கடமைக்காகத் தன் உயிரை மாய்க்காமல் இருக்கின்றாள். குடும்பம் என்ற மாளிகைக்கு உறவுகள் எனும் தூண் மிக அவசியம். இவள் யூத மக்களை காப்பாற்ற போராடத் தயாராகின்றாள் என்றால், தம் மக்கள் மீதும் உயிரையே வைத்துள்ள தன்மையை உணரமுடிகின்றது.

**கனவில் கணவனை கண்ட யூதித்து**

கணவர் இறந்தபின் கனவில் தோன்றி உற்சாகம் கொடுக்கும் வண்ணம் பேசப்படுகிறது.

''சிறையெனும் வாழ்க்கை இருந்திடலாம் – அதை
தவவலி மையுடன் வென்றிடுவாய்

முறையுடன் வாழ்ந்தஎன் நிலையளந்து – என்
ஆன்மாவும் செயல்படும் மரணமில்லை!
நிறைமன துடையாய் நீ இறைஞ்சி – தவ
வலுவுடன் பற்றுகள் களைந்தவளே!
இறைநிலை யடைந்து முக்திபெறும் – அக்
காலம் வரைநீ செயல்படுவாய்!” (மீட்.402)

யூதித்து தன் கனவில் இறந்து போன கணவர் வந்து பேசுவதாக உணர்கின்றாள். சிறைவாழ்வாக இருந்தாலும் அதனை தவ வலிமையுடன் வென்றிட வேண்டும். முறையாக வாழ்ந்ததனால் மனாசேயின் ஆன்மா அழியாமல் மன்றாடி வலிமையால் நிலைவாழ்வு பெற்றுள்ளது. இறைநிலை அடைந்து வீடுபேறு நிலை பெறும் வரை யூதித்து சிறப்பாக செயல்பட வேண்டும் என்ற நிலை எடுத்துக்காட்டப்படுகிறது. இப்படிப்பட்ட தத்துவத்தை கணவரே உரைத்த காரணத்தால் அத்தகைய வார்த்தைகளை அன்புடன் யூதித்து ஏற்றுக் கொண்டாள். துன்பத்தை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தினைப் பெற்று துணிந்து, இனி செயல்பட வேண்டும் என்பதை தன் உள்ளத்தே பதித்துக் கொண்டாள். விழித்துப் பார்த்ததும் இது கனவே என்பதை யூதித்து உணர்ந்து கொண்டாள். இங்கு யூதித்தை வீரப்பெண்மணியாக, எழுச்சியின்வடிவமாக உணர்ச்சி பிழம்பாய் காணமுடிகிறது ஞானம் நிறைந்த பெண்ணாக இருப்பதால் அவளுடைய நோக்கம் நிறைவேற எதையும் இழக்கத் தயாராகின்றாள்.

**முடிவுரை**

மீட்பரசி காவியத்தில் இல்லறம் இனிது பேசப்படுகிறது. யூதித்து கணவன் மேல்கொண்ட அன்பு, பாசம் பற்றியும், கதிரவன் ஒளியால் சூடுபட்டமைக்கு மருத்துவம் செய்ததையும் சாகும் தருவாயில் இறைவனிடம் மன்றாடுவதையும், கணவன் துடிக்கும்போது ஒரு பெண்ணிற்கு நேரும் துடிப்பையும் யூதித்து இறைவனிடம் தன் உயிரை எடுத்துக்கொண்டு கணவரின் உயிரைக் காப்பாற்றுமாறு கதறும்போது அவளின் இல்லற மாண்பு மிகுதியும் வெளிப்படுகிறது. மனாசே கனவில் உரைத்த தத்துவத்தை யூதித்து உள்ளத்தில் பதித்து வாழ்ந்து வருவதாகக் காட்டப்படுகிறது. இஸ்ராயேலர் இனத்தைக் காக்கும் எழுச்சிமிகு ஆற்றலை பெற்றவளாய் யூதித்து திகழ்கின்றாள். ஏனவே யூதித்து என்ற பெண் இல்லறமாண்புகள் நிறைந்த பெண்ணாக இருந்தாலும், தன் இனங்காக்கும் வீரத்திருமகளாகவும் விளங்கினாள் என காப்பியம் கூறுகின்றது.

## அடிக்குறிப்புகள்

[1] இளரசு.சோம 2010. காப்பியத்திறன். சிதம்பரம்; மெய்யப்பன் பதிப்பகம்.

[2] இன்னாசி.சூ. 1986. கிறித்தவ தமிழ்க்கொடை, சென்னை; மெய்யப்பர் தமிழாய்வகம்,

[3] எடிசன் லோட்டஸ் 2002.மீட்பரசி கன்னியாகுமரி;திரேசா நூல் ஆலயம்.